கொரோனா வைரசு நோய் (COVID-19)

# செல்லப் பிராணிகளையும் ஏனைய விலங்குகளையும் பராமரிக்கும் முறை

**உமக்கு COVID-19 இருந்தால் அல்லது நீரோ உமது செல்லப் பிராணிகளோ COVID-19 இற்கு வெளிப்பட்டிருந்தால்**

**விலங்குகளுக்கு COVID-19 தொற்றுவதைப் பற்றிய மட்டுப்பாடான அறிக்கைகளே உள்ளன. தற்போது COVID-19 பரவலில் செல்லப் பிராணிகளோ ஏனைய வீட்டு விலங்குகளோ ஒரு குறிப்பிடத் தக்க பணியை ஆற்றுவதைப் பற்றிய எச்சான்றும் கிடையாது. நீர் நோயுற்றிருந்தால், இன்னும் அறியப்படும் வரை நீர் ஏனையோரிடம் செய்வதைப் போன்றே செல்லப் பிராணிகளிடமும் ஏனைய விலங்குகளிடமும் தொடர்பைத் தவிர்ப்பது பரிந்துரைக்கப்படுகிறது.**

## உமது செல்லப் பிராணிகளை உங்கள் வீட்டில் வைத்துக் கொள்க

- நீர் நோயுற்றிருந்தால், உமது வீட்டில் நோயுற்றிராத வேறொருவரிடம் உமது செல்லப் பிராணிகளைக் கவனித்துக் கொள்ளுமாறு கூறுக.
- வீட்டிலுள்ள யாவரும் நோயுற்றிருந்தால் அல்லது நீர் தனியாக வசித்தால், உமது செல்லப் பிராணிகளைக் கவனித்துக் கொள்ள இயலுமாயின் அப்போதும் அவற்றை வீட்டில் வைத்திருப்பதே சாலச் சிறந்தது.



## செல்லப் பிராணிகளை மற்றொரு வீட்டுக்குக் கொண்டு செல்ல வேண்டுமாயின் இதனைக் கருத்திற் கொள்க

- கடுமையான COVID-19 நோய்க்கான அதிக இடர்ப்பாட்டைக் கொண்டோர் (70 வயதுக்கு மேற்பட்டோர் அல்லது ஏற்கனவே சுகாதார நிலைமைகளைக் கொண்டுள்ளோர்) முடியுமாயின், வெளிப்பட்ட விலங்குகளுக்கான தற்காலிகப் பராமரிப்பாளர்களாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- முடியுமாயின், செல்லப் பிராணிகளை ஏனைய விலங்குகளுடனோ ஆட்களுடனோ தொடர்பைக் குறைக்க வீட்டில் ஓரிடத்திற் தனிமைப்படுத்தி வைத்திருக்க.



## செல்லப் பிராணிகளுடன் நெருங்கிய அல்லது நீண்ட நேரத் தொடர்பைத் தவிர்க்க

- முடிந்தளவு அவற்றுடன் பின்வரும் தொடர்புகளைத் தவிர்க்க: அவற்றை அள்ளியணைத்தல், அவற்றுக்கு உம்மை உதைக்க விடல், அவற்றுடன் உணவைப் பகிர்ந்து கொள்ளல், அல்லது அவற்றை உமது படுக்கையில் உறங்கவோ உமது மடியில் இருக்கவோ இடங் கொடுத்தல்.



## செல்லப் பிராணிகளை ஆட்களிடமும் ஏனைய விலங்குகளிடமுமிருந்து தள்ளி வைத்திருக்க

- செல்லப் பிராணிகளை முடிந்தளவு உட்புறம் வைத்திருக்க.
- நாய்கள் வெளியிலுள்ள போது, அவற்றைக் கட்டி வைத்து ஏனையோரிடமும் விலங்குகளிடமுமிருந்து குறைந்த பட்சம் இரண்டு மீற்றர் தள்ளி வைத்திருக்க வேண்டும்.



## செல்லப் பிராணிகளைப் பராமரிக்கும் போது முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்க



- செல்லப் பிராணிகளை, அவற்றின் உணவை அல்லது வழங்கல்களைத் தொட உடன் முன்னரும் தொட்டவுடன் பின்னரும் சவர்க்காரமும் நீரும் கொண்டு உமது கைகளைக் கழுவுக அல்லது ஒரு மதுசார அடிப்படையிலான கைத் துப்புரவாக்கியைப் பயன்படுத்துக.
- செல்லப் பிராணிகளுக்கு அருகில் இருமவோ தும்மவோ வேண்டாம். எப்போதும் உமது முழங்கையின் அல்லது ஒரு திசுவின் மீது இருமவோ அல்லது தும்மவோ செய்து பின்னர் உமது கைகளைத் துப்புரவாக்குக.
- எப்போதும் உமது முகத்தைத் தொடுவதைத் தவிர்க்க.

## உமது செல்லப் பிராணிகள் COVID-19 இற்கு வெளிப்பட்டிருந்தால் அவற்றுக்கு எவையேனும் அறிகுறிகள் உள்ளனவா என்று கண்காணிக்க



- உமது செல்லப் பிராணி நோயின் அறிகுறிளைக் காட்டினால் உமது விலங்கை ஒரு சிகிச்சையகத்திற் பார்க்க வேண்டுமா அல்லது வீட்டிலேயே நிருவகித்துக் கொள்ள இயலுமாவெனத் தீர்மானிக்க உமது விலங்கு மருத்துவரை அழைக்க.

## பண்ணை விலங்குகளுக்கும் பண்ணைப் பறவைகளுக்கும் வெளிப்படுவதைத் தவிர்க்க

- பண்ணை விலங்கு வளர்ப்போர் செய்ய வேண்டியவை:
  - நடப்பிலுள்ள எல்லா உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்க
  - விலங்குகளின் பராமரிப்பை வழங்கத் தேவையான தொடர்புக்கு மாத்திரம் விலங்குகளுடனான தொடர்பை மட்டுப்படுத்துக
- முடியுமாயின், உமக்கு இவ்வாறிருப்பின் உமது விலங்குகளைப் பராமரிக்காதீர்:
  - COVID-19 இருப்பதாக நோயறியப்பட்டிருத்தல் அல்லது ஒரு சுவாச நோயின் அறிகுறிகள் இருத்தல்
  - COVID-19 இற்கு அல்லது ஒரு சுவாச நோயுள்ள ஒருவருக்கு வெளிப்பட்டிருத்தல், அல்லது
  - சென்ற 14 நாட்களில் கனடாவுக்கு வெளியே சென்றிருத்தல்
- நீரே உமது விலங்குகளைப் பராமரிப்பது தேவைப்படின்:
  - மேலே சுட்டிய அடிப்படைக் கிருமித் தொற்றுத் தடுப்பை அல்லது கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பின்பற்றுக, அத்துடன்
  - விலங்குகளுடன் தொடர்புறக்கூடியதாக நீர் தொடும் எக்கருவியையும் துப்புரவாக்குக / தொற்று நீக்குக

## வைரசைப் பற்றி அறிக

COVID-19 ஒரு புதிய வைரசாகும். அது கிருமி தொற்றிய ஒருவரிலிருந்து ஒரே வீட்டில் வசிப்போர் அல்லது பராமரிப்பு வழங்குவோர் போன்றோருடன் அவர் தொடர்பு கொள்ளும் போது சுவாசத் திவளைகளாக ஏனையோருக்குப் பரவுகிறது. நீர் COVID-19 ஐப் பற்றிய இற்றைப்படுத்திய தகவல்களை ஒன்ராறியோ சுகாதார அமைச்சின் வலைத்தளத்திலும் அணுகலாம்: ontario.ca/coronavirus.

மேலதிகத் தகவல்களுக்காக, தொடர்பு கொள்க: ____________________________________________

**இந்த ஆவணத்திலுள்ள தகவல்கள் 2020 யூலை 31 அன்றைக்கு நடப்பிலுள்ளவை**

Ontario

**©ஒன்ராறியோவுக்கான இராணியின் அச்சகர், 2020**